1

# நிசப்தங்களின் விடியல்

Dr ராஜஸீலன்

நடு இரவைக்கடந்து பொழுது விடிவதற்கான சமயத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது .இந்த விடிவதற்கு முன் உள்ள இரவு நேரம் மிகவும் அமைதியான சூழ்நிநிலைகள் .சாலைகளில் ஒடுகின்ற ஒரிரு வாகனங்களில் ஓசைகள் மட்டும் ஒலித்துக்கொண்டிருக்கும்

விடிவதற்கும் இருள் விலகுவதற்கும் இடைப்பட்ட நிசப்தங்களின் விடியல் நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் சமயம் நேரம் சுமார் மணி மூன்று இருக்கும் .

வெறிச்சோடி கிடந்த சாலைகள் சப்தங்கள் இன்றி நிசப்தமாக இருந்த தெருக்கள் மக்கள் அனைவரும் அயர்ந்து தூங்குகின்ற நேரம்

2

இந்த அமைதியை கிழித்துக்கொண்டு வந்தது ஒரு இளம் பெண்ணுடைய அலறல் சப்தம்

அடுக்கு மாடி குடிருப்பின் முதல் மாடியிலிருந்து வந்த அந்த பெண்ணின் குரல்

தொடர்ந்து கதவை திறக்கும் சப்தம் .கதவு திறந்த சப்தத்துடன் தொடர்ந்து இன்னொரு பெண்ணின் உதவிக்குரல் .யாராவது வாருங்களேன் .என்றது ஓங்கிய சப்தத்துடன் அலறிய இளம் பெண் குரலும் .அம்மாவின் குரலும் மட்டுமே கேட்டது வேறு எந்த சப்தமும் கேட்கவில்லை

பெரும்பாலான குடியிருப்புகளில் 60 வயதிற்கு மேலானவர்கள் மட்டுமல்ல நோயாளிகளாக இருப்பவர்கள் தான் குடியிருப்பின் வாட்ச்மன் . இந்த வயதானவர்களை வேலைக்கு அமர்த்தி அதில் புடுங்கும் வருமானத்தில் லச்சங்களை சம்பாதித்து குவிக்கும் செக்யூரிட்டி புரோக்கர்கள் வழியாக பணிக்கு அமர்த்தப்பட்டு இரவு பணியில்

# 3

இருந்த வயதான வாட்ச்மன் தனது நிலைகளை மறந்து அமர்ந்துகொண்டு தூங்கிகொண்டிட்ருந்தார்

அந்த சமயத்தில் போலீஸின் விசில் சப்தம்

இந்த பெண்களின் குரல்களை தொடர்ந்து சாலையிலும் ரோந்து சென்ற

போலீஸ் காரரின் விசில் சப்தம் அதை தொடர்ந்து அம்புலன்ஸ் ஒன்று வேகமாக வந்து தந்த வோங் வோங் என்று சைரன் ஓசையும் நிசப்தத்தை நிர்மூலப்படுத்தின.

வேகமாக வந்த ஆம்புலன்ஸ் வந்த வேகத்தில் ஒரு சில நிமிடங்கள் மட்டும் குடியிருப்பு அருகே நின்று மீண்டும் அதி வேகத்துடன் கிளம்பியது ஆஸ்பத்திரியின் முன்னால் நின்றது

அவசரமாக வந்த ஆம்புலன்ஸ் மருத்துவமனைக்கு முன் நின்றதும்

4

ஆம்புலன்ஸில் இருந்த பெண் ஆஸ்பத்திரி ஊழியர்களால் சிகிச்சை அறைக்குள் கொண்டு செல்ல பட்டாள்

அந்த சமயத்தில் தெருவில் மோட்டார் பைக்கில் ரோந்து வந்த போலீஸ் காரரின் கைகளிலிருந்து வயர்லெஸ் சப்தம் . அந்த குடியிருப்பின் அருகில் திரென்று அந்த மோட்டார் பைக் நிற்கிறது .

போலீஸ் காரர் சாலையில் கிடந்த ரெத்தம் படிந்த கத்தியை தனது பைக் வெளிச்சத்தில் கண்டு பைக்கிலிருந்து இறங்குகிறார் .

தனது கண்களுக்கு யாரும் தெரியாத காரணத்தால் உடனடியா பெரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார் உயர் அதிகாரி சம்பவ இடத்திற்கு வேகமாக வந்து விட்டார்

கத்தியை பாதுகாப்பாக எடுத்துக்கொண்டனர் .சுற்றும் முற்றும் பார்த்தார்

5

ரத்துளிகளை தொடர்ந்து போகிற போது அதே அப்பார்ட்மண்டின் சுவர்களிலும்  ரெத்த கறைகள் இருந்தன

 இங்கே ஆஸ்பத்திரியில்  நர்ஸ் வேகமாக வந்தார் . இப்போ அம்புலன்ஸ்ல வந்த பெண்ணுடைய சொந்த காரங்க யாருங்க

ஒரு அம்மா அருகில் வந்தார் என்னுடைய பெயர் வசந்தா . ஆம்புலன்ஸில் இப்போ அட்மிஷன் பண்ணியது என்னுடைய மகள் தான் என்றார்

.என்னுடைய பொண்ணு பெயர் வித்யா  .என்று சொல்ல வந்திருந்த நர்ஸ் கையிலிருந்த பைலை நீட்டினார் .

இதில் ஒரு கையெழுத்து போடும்மா என்றார் . வசந்தாவும் கையெழுத்திட்டார்

கையெழுத்து வாங்கிக்கொண்ட நர்ஸ் உடனடியாக அவசரமாக அறைக்குள் சென்று விட்டார்

6

நர்ஸ் சென்ற சிறிது நேரத்தில்
வித்யாவின் உறவினர்கள் யார்
இருக்கிறார்கள் என்று குரல்
கொடுத்தார் ஒரு இளம் பெண்

தன்னுடைய மகளுக்கு என்னவோ
யாதோ என்ற பதட்டத்துடன்

பதில் கொடுத்தார் வசந்தா .நான்
தான் என்றார்

சீக்கிரமாக வாங்க என்றார்
ஆஸ்பத்திரியின் இளம் பெண்

கவுண்டர் அருகில் வந்த வசந்தாவிடம்
உடனடியாக ஆபரேஷன் கட்டணமாக
75000 கட்ட வேண்டும் என்றார் .

அவசரமாக வந்ததால் பணம்
ஏதுமில்லை என்றார் வசந்தா

.பணம் கட்டுனாதான் ஆப்பரேசன்
பண்ண முடியும் .அவசரம்

இந்தாங்க கார்டு என்று நீட்டினார் .

கார்டு உரசப்பட்டு ஆஸ்பத்திரியின்
பணம் செலுத்தப்பட்டது

7

 வித்யா  ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்ல பட்டார்  .

பணம் கட்டிய சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் நர்ஸ் வேகமாக வந்தார்

இந்தாங்க குழந்தையை காப்பாத்திட்டோம் ஆண் குழந்தை பிறந்திருக்கு

அம்மாவுக்கு சிகிச்சைகள் கொடுக்க படுகிறது பொறுத்திருங்கள் .

என்று குழந்தையை வசந்தாவிடம் காட்டிவிட்டு நர்ஸ் சென்றுவிட்டாள் .

நர்ஸ் சென்ற சில நிமிடங்களில் போலீஸ் அதிகாரி  ஆஸ்பத்ரிக்குள் வந்தார் . வசந்தாவை பற்றி ஆஸ்பத்திரி கவுண்டரில் கேட்ட பிறகு வசந்தா அருகில் வந்தார் போலீஸ் அதிகாரி

போலீஸ் டிரஸ் பார்த்த மாத்திரத்தில் தனது குமுறல்களை கொட்ட வசந்தா துவங்கினர்

8

அவசரம் ஆஸ்பத்திரிக்கு வந்தோம் .அப்போ வீட்டிலே டெலிவரி பாத்தாங்க .அப்புறம் ஆஸ்பத்திரிக்கு வந்தாங்க குழந்தயை பயமின்றி பெத்துட்டு போனாங்க .

இப்போ எல்லாம் பொம்புள டாக்டருங்க தானும் ஒரு பெண் என்பதை கூட எண்ணி பார்க்காமல் பாவம் பணத்துக்காக

சின்ன இளம் பெண் பிள்ளைகளை எல்லாம் நோர்மல் டெலிவெரிக்கு விடாமல் கத்தியால் வெட்டி பெண்களை துன்பப்படுத்துகிறார்கள் .பணம் புடுங்கட்டும்

அதுக்குன்னு பயங்காட்டி துன்பப்படுத்தி வாங்குவதை எண்ணினால் இதும் ஒரு வகை மிரட்டல் தான் இதுக்கெல்லாம் கடுமையான சட்டம் வேணுங்க என்று புலம்பி தீர்த்தார்

இதுக்கெல்லாம் பொம்புள மருத்துவர்களும் மருத்துவமனைகளும் தான்

பொறுப்பேற்கணும் ,நான் வந்த விசாரணையே வேறு என்றார் அதிகாரி

வசந்தா .அவர் இதயத்திற்கருகில் சட்டையில் அணிந்திருந்த பேட்ஜ் பார்த்து தேவராஜ் என்று தெரிந்து கொண்டார்

இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ் மெதுவாக ஆரம்பித்தார் உங்கள் குடியிருப்பினருகில் ரெத்தம் படிந்த கத்தி கண்டெடுக்கப்பட்டுள்ளது .அது மட்டுமல்ல உங்களது வீட்டருகில் ரெத்த கறைகள் இருந்த படியால் உங்களிடமிருந்து விசாரணையை ஆரம்பிக்கலாம் என்று வந்திருக்கிறேன்

நானும் என் பொண்ணும் ஆஸ்பத்திரிக்கு போகிறதற்காக ஆம்புலன்ஸ் வருகைக்கு முன்னாடி ரோட்டுக்கு போய்டலாம்னு கிளம்புனோம் .

முகமூடி போட்ட ஒருத்தன் சமயத்தை பயன்படுத்தி கத்தியை காட்டி

.நகைகளை கழற்றுங்கன்னு சொன்னான் .

அந்த சமயத்தில் எனக்கு எப்படியோ தைர்யம் வந்தது

கையில் பெரிய பிளாஸ்க் வைத்திருந்தேன் அதை தூக்கி அவன் கையில் ஒரு போடு போட்டேன் .கத்தி கையிலிருந்து கீழே விழுந்து விட்டது

கத்தி தெறிச்சி கீழ விழுந்ததும் ..அவன் மதில் சுவர் மேல வேகமா ஏறினான் .அவனை நோக்கி கத்தியை வீசினேன் .

அவன் தப்பித்து விட்டான் . அம்புலனஸும் வந்து விட்டது நாங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்துட்டோம் .

உங்கள் குடியிருப்பிலிருந்து தப்பித்த முகமூடி திருடன் ஒடுவதை ரோந்து பணியிலிருந்த போலீஸ்காரர் பார்த்திருக்கிறார் .அவரது விசில் சப்தம் கேட்டு அவன் ஓடியிருக்கீறான்

11

அவர் விசில் சப்தத்தை கேட்டு மாயமாகி விட்டான் .

இந்த கத்தியில் ரெத்தம் எப்படி வந்தது .

நான் கத்தியை எடுத்து வீசுகிறபோது கூட ரெத்த கரை என் கண்களுக்கு தெரிந்தது  என்றால் வசந்தா

அந்த திருடன் எப்படி இருப்பான்னு தெரியுமா .

கருப்பு கலர்ல ஜீன்ஸ் பாண்ட் .மேல முழுசா கவர் பண்ணுன ரெயின் கோட் போட்டிருந்தான் .

விசாரித்து கொண்டிருக்கும் போது மீண்டும் நர்ஸ் வந்தார் .உங்க பொண்ணுக்கு ஞாபகம் வந்தாச்சு .நீங்கள்போய் பார்க்கலாம் என்றார் .

நீங்க உங்க மகளின் சிகிச்சைகளை கவனியுங்கள் நான் தேவை பட்டால் உங்களிடம் மீண்டும் வருவேன் என்று விடை பெற்றார் தேவராஜ்

12

வசந்தாவும் தன்னுடைய மகள் வித்யாவை  காண்பதற்காக விரைந்தாள்

குழப்பத்தின் உச்சியில் இருந்த தேவராஜ் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியில் வருவதற்கும் நேரம் விடிவதற்கும் சரியாக இருந்தது .

நிசப்தங்களின் விடியல் தொடங்கிவிட்டது .பறவைகளின் சப்தங்கள் மனிதர்களின் பேசும் குரல்கள் என்று நேரமும் விடிந்து கொண்டிருந்ததது

 அந்த தெருவிலிருந்து தனியார் cctv மற்றும் காவல்துறையால் நிறுவப்பட்ட  cctv காட்சிகளை ஆய்வு செய்வது என்ற முடிவுக்கு வந்தார் .

முதலில் காவல்துறையின் கண்காணிப்பு அறைக்கு வந்தார் கண்ட்ரோல் ரூம் வருகிறார் . சி சி டீ வீ காட்சிகள் வழியாக பார்த்தார்

பார்த்துக்கொண்டே இருக்கும் போது .அந்த அம்மா சொன்ன அடையாளங்களுடன் ஒருவன் வேகமாக வந்து கருப்பு நிற பென்ஸ் கார் ஒன்றில் ஏறுகிறான் என்றார் காட்சிகளை துல்லியமாக கம்ப்யூட்டர்ல பார்த்துக்கொண்டிருந்த அதிகாரி

சார் அந்த நம்பர் பீகார் ரெஜிஸ்ரேஷன்ல இருக்கு .சரி அந்த காரை சட்லைட் வியூ ல பார்த்த போது.கத்திப்பாரா பாலத்துக்கு கீழ் நேரம் விடியும் வரை நின்றிருக்கிறது .

சபாஷ் தகவலுக்கு நன்றி என்று அங்கிருந்து கிளம்பினார் இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ்

நடக்க நடக்க கண்ட்ரோல் ரூம் அதிகாரியிடம் எப்படியும் கத்திப்பாரா பாலத்துக்கு அந்த கார் மீண்டும் வரும் நம்ம டிபார்ட்மெண்ட அளாட்ட இருந்து கண்காணிக்க சொல்லு .

## 14

கிண்டி போலீஸ் நிலையத்திலிருந்து இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ்க்கு ஒரு முக்கிய தகவல் வந்தது .

அந்த கார் விவரங்களை எடுத்த பொது அது பெசன்ட் நகரில் உள்ள ஒருவருக்கு சொந்தமானது என்றார்

சரி எனக்கு அட்ரஸ் அனுப்புங்க .

விலாசத்தை பெற்றுக்கொண்ட தேவராஜ் அது பெசன்ட் நக ர் விரைந்தார் .

பிரமாண்டமான பங்களா ஒரு ஏக்கரில் பிரமாண்டமான வீடு . உள்ளே சென்றார் .பெரிய தொழிலதிபர் அவர் .

காரை பற்றி விசாரித்தார்

சார் நான் அந்த காரை விற்று ஒரு மாசம் ஆகிட்டுது சார் .

30 லட்சத்துக்கு விற்று விட்டேன் . இன்னும் நான் பேரு கூட முறைப்படி மாற்றிக்கொடுக்கல .

எழுதி கொடுத்திருக்கிறேன் .அவருடைய அட்ரஸ் ப்ரூப் என்னிடம் உள்ளது என்றார் .

இதும் ஒரு வேலை நல்லதுக்குதான் .அந்த கார் நம்பர் பிளேட்டுகளை மாற்றி மாற்றி கொள்ளை அடிக்கும்

கும்பலிடம் இருக்கிறது .இப்பொது அந்த பென்ஸ் கார் உங்களது பெயரில் தான் உள்ளது .உங்களை நம்புகிறேன் .

நீங்கள் உடனடியாக காவல் நிலையத்தில் உங்கள் பென்ஸ் கார் திருடு போய் விட்டதாக புகார் கொடுங்கள் .

இந்த புகாரை பெற்றுக்கொண்டு அந்த குற்றவாளியை தேடுவதற்கான முதல் படி தயாராகி விடும் .நாங்களும் சுறுசுறுப்பாக செயலில் இறங்கிடுவோம் என்றார் இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ்

16

அல்லது  உங்க பேரு அசிங்கமாகிடும் என்றார் இன்ஸ்பெக்ட்டர்

கார் வாங்கியதாக தொழிலதிபர் சொன்னவனின் விலாசம் விவரங்களை பெற்றுக்கொண்டார்

இன்ஸ்பெக்ட்டர்  கார் வாங்கியவன் அட்ரஸுக்கு போனார் .அவன் கொடுத்திருக்கும் விலாசம் பொய்யானது .அது போன்று விலாசம் இல்லவே இல்லை

இன்ஸ்பெக்டர் தேவராஜின் வெறி அதிகமானது

கத்திப்பாரா வை சுற்றி அந்த கார் சம்பவம் நடந்த அன்று சுற்றி வந்ததாக நம்பத்தகும் தகவல்கள் இருந்தன.

அங்கு சென்றார் பக்கத்தில் இருந்த திரை அரங்கத்தில் சென்று விசாரித்தபோது இந்த கார் செகண்ட் ஷோ வந்து சென்றதாக உறுதியான தகவல் கிடைத்தன

17

இன்ஸ்பெக்ட்டரின் புலன் விசாரணை அருகில் இருந்த 5 நட்சத்திர ஹோட்டலுக்குள் புகுந்தது .இந்த கார் அங்கு வந்ததாகவும் தகவல் கிடைத்தது

தனது கார் ஓட்டும் காவல்காரரிடம் தேவராஜ் சொன்னார் அந்த கார் இந்த ஏரியாவில் சுற்றி வரும் சொகுசு கார் தான் .இந்த சுற்றுவட்டாரத்தை சுழற்றி வந்தால் போதும்

கார் கிடைத்து விடலாம் இப்படியே இந்த ஏரியாவை சுற்றி வரலாம் என்று சொன்னனதும் கார் வலம்வர தயாரானபோது

வயர்லெஸ் செய்தி வருகிறது அந்த கார் கிண்டி அருகே உள்ள பெரிய மால் ஒன்றின் பார்க்கிங் ல இருக்கிறது என்ற தகவல் தான் அது

சூப்பர் அந்த கார் பற்றி விசாரியுங்கள் .அந்த காரை எடுக்க வருபவனை நோட்டமிட்டு பின் தொடருங்கள் என்றார்

18

அந்த காரை நோக்கி25 வயது இளைஜன் வருகிறான் அவன் கட்டியணைத்தபடி 17 வயது மதிக்க தக்க ஒரு சின்ன பெண்ணும் வந்து காரில் ஏற முயற்சிக்கையில் உங்க கார் டிக்கி கொஞ்சம் திறந்து காட்டுங்கள் என்றார் போலீஸ் காரர் .

டிக்கி திறப்பதற்குள் இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ் ஸ்பாட்டுக்கு வந்து விட்டார்

திறந்த டிக்கிக்குள் ஒரு சூட்கேஸ் இருந்தது . கார் அருகில் வந்த தேவராஜ் சூட்கேஷை திறக்கும் படி சொன்னார்.

அதற்குள் 5 லட்சம் பணம்

ஒரு முக மூடி .ரெயின் கோட் ஒன்னும் டூப்ளிகேட் நம்பர் பிளேட்களும் இருந்தன .

சரி இவனை இங்கே வைத்து விசாரிக்க கூடாது .ஸ்டேஷன் கூட்டிட்டு போய்டலாம் .உன் பெயர் என்னடா னு கேட்டார் .

கிரிநாத் என்றான் .

19

சரி இந்த கிரிநாதையும் அவனது பென்ஸ் காரையும் ஸ்டேஷன் கொண்டு போங்க . நான் இந்த பெண்ணை இன்ஸ்பெக்டர் எலிசபெத் வரவழைத்து

விசாரிக்க சொல்லுகிறேன் . என்று கட்டளையிட்ட தேவராஜ்

அந்த 17 பெண்ணை தனது காரில் ஏற்றிக்கொண்டு பெண் இன்ஸ்பெக்டர் வருகைக்காக காத்திருந்தார்

ஒப்படைத்து விட்டு வருகிறேன் என்றார்

இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்  வந்ததும் .

இந்த பொண்ணு சின்ன பொண்ணா இருக்குது .ஸ்டேஷன்   விசாரணைக்கு எனக்கு விருப்பமில்லை

எங்கயாவது வைத்து விசாரித்து உண்மையை தெரிந்து கொள்வோம்

ஒரு வீட்டு சாவியை மட்டும் கையில் கொடுத்தார்.அழைத்து சென்று விசாரித்து உண்மையை தெரிந்து

கொள் என்று சொல்லி
இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்தை
அனுப்பினார்

அந்த பெண்ணை  என்னுடன் வா
என்றவர் .தன்னுடன் ஸ்கூட்டியில்
அமர வைத்து அழைத்து சென்றார்

தனிமையான அறைக்குள் அந்த
பெண்ணை கொண்டு வந்தார்
இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் .
கதவுகளை தாழிட்டார்.

நடுக்கமும் பதற்றமும் கண்ணீர்
தானாக வழிந்து கொண்டிருந்த அந்த
பெண்ணிடம் விசாரிக்க
ஆரம்பித்தார் எலிசபெத் .

நான் உன்னை ஏதும் செய்யமாட்டேன்.
நான் கேக்கிறதற்கு மட்டும்
உண்மையைத்தான்
சொல்லனும்.எதாவது பொய் சொன்ன
புளந்துடுவேன் என்றார் .

கண்ணீரை துடை . அருகிலிருந்த
செயரில் உட்கார சொன்னார்

## 21

அவள் உட்கார்ந்தாள் . உன்னுடைய பெயர் என்ன என்றார் இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் .

பதிலுக்கு தர்ஷினி என்றாள் அந்த சின்ன பொண்ணு

இருவரும் எதிர் எதிர் இருக்கையில் அமர்ந்தனர் . நீ கொலை கேசுல மாட்டி இருக்கிறே .

உண்மையை சொன்னால் இந்த வழக்கிலிருந்து தப்பிக்க வைப்பேன் .இல்லை ஆயுள் முழுசும் ஜெயிலுக்குள்ள இருக்கணும்னு பயம் காட்டினார்

கதறிஅழுது விட்டாள் தர்ஷினி

கொலையெல்லாம் பண்ணுற அளவுக்கு எனக்கு தைரியம் இல்ல மேடம்

இந்த விஷயம் எங்க வீட்டுக்கு தெரிந்தால் குடும்பமே தற்கொலை பண்ணிடும் மேடம் .என்னை காப்பாத்துங்க மேடம்

நான் எல்லா உண்மையும் முழுசா சொல்லுறேன் என்றாள் தர்ஷினி .. சொல்ல துவங்கினாள்.

நான் நல்ல குடும்பத்திலிருந்து வந்தவள் என்னுடைய அப்பா பெரிய கார்பொரேட் கம்பெனிலபெரிய பதவியில் இருகிறார் ,

என்னுடைய அன்னான் தனியார் கல்லுரியில் இன்ஜினியரிங் படித்து கொண்டிருகிறான்

நான் ரொம்ப நல்ல படிச்சி உயர்ந்த பட்டங்கள் வாங்கணும்னு

ஊரில் படிக்க வைக்காமல் இந்த உயர்ந்த உலகத்தரம் வாய்ந்த

ஸ்கூல் படிக்கிறதுக்காக மெட்ராஸுக்கு அனுப்பி படிக்க வைக்கிறாங்க

.நான் இங்கு ஹாஸ்டெல்ல தங்கி இருக்கேன் .

ஒரு நாள் ஸ்கூல் பக்கத்துல ஒரு பைக் என் மேல மோதி கையிலிருந்த புக் சிதறிட்டுது .அப்போ அங்கே நின்று

கொண்டிருந்த கிரிநாத் உதவி பண்ணியது தான் ஆரம்பம் .

எனக்கு சின்ன காயம் பட்டது .என்னுடைய காயம் பற்றி விசாரிப்பான் .

நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க காயம் பெரியதனால் உங்க மனசு வலிக்கும் .ஊர்ல இருந்து வந்து தங்கி இருக்கிறாயா .எதாவது உதவி வேணுனா போன் பண்ணுனு

அவன் மொபைல் நம்பரை கொடுத்தான் .

அவன் கொடுத்த போன் நம்பரை நான் வாங்கவில்லை

அவன் என்னை புகழ்ந்தது என்னுடைய இதயத்திற்குள் ஒரு புத்துணர்ச்சி கொடுத்த சுகம் என்றாள்

அடுத்த நாள் என்னை விசாரித்தான் . நானும் பதில் சொன்னேன்

நான் காயத்திற்கு மருத்துவம் செய்யவில்லை .மூன்றாவது நாள்

காயம் சிறுது செப்டிக் ஆகி ஜுரம் வந்தது அதனாலே ஸ்கூல் போகாமல் ஆஸ்பத்திரிக்கு போகலாம் என்று செல்லும் வழியில் அவன் என்னை பார்த்து ஆட்டோ எல்லாம் ஏற்றி விட்டான் .

 கண்டிப்பா இந்த கண்டிசன்ல உங்களுக்கு என்னுடைய உதவி தேவை படும் என்று ஆட்டோவில் ஏறுகிறபோது மீண்டும் அவனது மொபைல் நம்பரை கொடுத்தான் வாங்கி கொண்டேன்

ஆஸ்பத்திரிக்கு போயிட்டு ரூமுக்கு வந்த பிறகு எதாவது வேணுனா சொல்லுங்க வாங்கி தரேன் என்றான்

ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வந்ததும் எனக்கு எதுவும் தேவைப்படவில்லை .

இருந்தாலும் அவனிடம் பேசணும் போல இருந்தது .சும்மா போன் பண்ணி

சிகிச்சைகள் எல்லாம் முடிச்சிட்டு வந்துட்டேன் .ஆஸ்பத்திரியில் எல்லாமே கொடுத்துட்டாங்க .எதுவம்

என்னக்கு தேவை இல்லை .நீங்க கேட்டதற்கு நன்றின்னு சொன்னேன் .

அப்புறம் அவன் ஆஸ்பத்திரிக்கு போன கதை அது இதுனு பேசுனான்

அவன் போன் பேச்சுகளும் பிடித்திருந்தது .

இந்த நிகழ்ச்சிக்கு பிறகு என்னுடைய மொபைல் என் அவனுக்கு கிடைத்து விட்டது .

இரவில் அதிக நேரம் பேச ஆரம்பித்தான் .எனக்கும் சுகமாக தெரிந்தது

அவனது பேச்சு செயல்கள் எல்லாம் ரொம்ப நல்லவனாக இருந்தது

இனம் புரியாத உணர்ச்சிகளால் அவன் மீது காதல் உருவாக்கியது

மெதுவாக சாப்பாட்டுக்கு ஹோட்டலுக்கு அழைத்து போனான் .

அவன் கூட பைக்ல போறதுல ஒரு சுகம் தெரிந்தது .அதுனால் அடிக்கடி பைக்ல போக ஆரம்பித்தேன்

## 26

உடனே இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் குறுக்கிட்டார் .

அப்புறம் என்ன பார்க் ஹோட்டல் தியேட்டர் னு நெறய சுத்தி இருப்பீங்க சரிதானே

உண்மை தான் மேடம் என்றவள் பெரும்பாலும் ஸ்கூல் பிள்ளைகளின் காதல் காட்சிகள் இருக்கும் படம் பாத்து அழைத்து போவான்

மொத்தத்தில் ஸ்கூல் பிள்ளைகளுக்கு காதல் போதையை ஏற்றி சீரழிக்கிறது சினிமாக்காரன்னு சொல்லுறே என்றார் இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்

எனக்கு தொடர்ந்து இன்ப கிளர்ச்சிகளை கொடுத்து கொண்டே இருந்தான் .அதில் பெரிய சுகம் கிடைத்தது போன்ற உணர்வு எனக்கு

ஒரு சனிக்கிழமை நான் அறையில் தூங்கி கொண்டிருந்தேன் திடீரென்று வெளியில் பார்ட்டிக்கு போகலாம்னு கூப்பிட்டான் கிளம்பி போனேன்

தனிமையில் ஒரு அறைக்கு அழைத்து போனான் என்னை கட்டாயப்படுத்தி மது குடிக்க வைத்தான்

மறுத்து பார்த்தேன் .கேட்கவில்லை .என்னுடைய வாயில் அவனே ஊற்றினான் .கொஞ்சம் தடுமாற்றம் உணர்ந்தேன் .

போதையிலும் அதற்கு பின்பும் எதோ புதிய சுகம் எனக்கு தெரிந்தது

இது தொடர்கதை ஆகியது

நான் அவன் மீது பைத்தியமாகி போனேன் .அவன் எது சொன்னாலும் செய்து விடும் அடிமையாகி போனேன்

இந்த வயசெல்லாம் எதுவும் புரியதா வயசுதான் .சாக்லெட் திண்ணனும்னு தோணும் அப்புறம் அதற்க்கு அடிமையாகி விடும் வயது இது .மொத்தத்தில் ஏதும் புரியாத வயதை அவன் பயன் படுத்தி இருக்கான் என்றார் இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்

ஒரு நாள் வாட்ஸப் ல வீடியோ அனுப்பி இருந்தான் .

என்னுடைய நிர்வாணா வீடியோ நான் அவன்கூட உல்லாசமாக இருந்த விடியோக்கள் .

அவன் அனுப்பிய வீடியோ பார்த்த பிறகு தான் போதையில் அவன் செய்த திருவிளையாடல்கள் எனக்கு புரிந்தது

ரொம்ப கேவலமா இருந்தது மேடம் .என்னுடைய கோலத்தை என்னாலே பார்க்க முடியலே .இப்போ தான் செத்து போய்டலாம்னு தோணிச்சு

உடனே போன் பண்ணுனேன்

என்ன வேலை செய்திருக்கிறே கிரி

இந்த காட்சிகள் எல்லாம் எனக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்தது .நான் சொல்லுறே வேலையை மட்டும் நீ செய்யணும் .தவறினால்

இந்த காட்சிகளை முதல்ல உன் அண்ணனுக்கு அனுப்பி விடுவேன்

என்றான் .எவ்வளவு கேவலமா
இருக்கும் மேடம் .நான் செத்து
போனாலும்

அது மத்தவங்களுக்கு தெரிந்தா
எவ்வளவு அசிங்கம் . என்னுடைய
பாசமுள்ள குடும்பம் என் கண்
முன்னாலே வந்தது .

நீ நான் சொல்லுறதை கேக்கணும்
அப்படி தவறும் போது முதல்ல உன்
அண்ணனுக்கு அனுப்புவேன்
அப்புறம் உன் அப்பா அப்புறம் உலகம்
புல்லா மிரட்டினான் .

கெஞ்சினேன் கதறினேன்

ஒன்னும் சொல்ல முடியல

முதல்ல தமிழ்நாட்டுல சிறுமிகளை
அசிங்கப்படுத்தும்
சினிமாக்காரர்களை தண்டிக்கணும்
வெளிஊர்ல பிள்ளைகளுக்கு
பாதுகாப்புக்கு பேசுறதுக்கு போன
கொடுத்தா .நீங்க இந்த வயசுலே
பெரிய கிரிமினல்கள் ஆகி
போறீங்களே என்று சொன்ன
இன்ஸ்பெக்ட்டர்

30

தர்ஷினியை நாலு சாத்து சாத்தினார்

அப்புறம் சொல்லு கோபமடைந்தார்

அடிகளை வாங்கி கொண்டு அழுதபடி தொடர்ந்தாள் தர்ஷினி

இரவு செகண்ட் ஷோ படத்துக்கு கூட்டிட்டு போனான் .படம் முடிந்ததும் எனக்கு நான் செய்ய வேண்டியதை விளக்கி சொல்லுவான் .

சினிமா முடிந்ததும் நான் செய்யவேண்டிய விவரங்களை எப்படி திருடவேண்டும் என்பதை திட்டம்போட்டு சொல்லுவான் .

அவன் திட்டம் போட்டபடியே திருடும் நபர்களை தேர்வு செய்வான் சொன்னது போலவே நானும் செயல்பட்டு திருடுவேன் .

இதுவரை எந்த திருட்டிலும் மாற்றிக்கொள்ளவில்லை என்று குறுக்கிட்டார் இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்

# 31

இவனுடைய தேர்வு ரொம்ப
வித்யாசமா இருக்கும்

வெளியூர்களிலிருந்து சென்னைக்கு
வரும் படிக்கிற பொண்ணுங்களை
தெரிவு செய்வான்

நிசப்தமான விடியல் வேளையில்
சென்னைக்குள் வருவது போல திட்டம்
போட்டு வரும் பெண்கள்

இவர்களது ஆண் நண்பர்கள் பஸ்
நிலையமோ அல்லது ரயில்
நிலையமோ வந்து  அழைத்து சென்று
ஒதுக்குப்புறங்களில் நின்று கொண்டு
கொஞ்சுகிறவர்கள் தான் இவனது
தேர்வு

தனது ஆண் நண்பர்களை அழைத்து
மறைவான இடங்களில் அமர்ந்து
கொண்டு அவர்களது

லீலைகளில் முனைப்புடன் இருக்கும்
போதுஇவர்கள் கவனம் திரும்பாத
நிலைமையில்

பெண் கழுத்திலிருக்கும் நகையை
திருடி வருவேன் .

32

பெரும்பாலும் லகுவாக அறுக்கும் நிலையில் உள்ள செயின் தான் .

நல்ல பிளான் நகையை பறிகொடுத்தவர்கள் சத்தமும் போடமாட்டார்கள் புகாரும் கொடுக்கமாட்டார்கள் .அவர்களுக்கு அசிங்கம் என்பதால் .வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தி கொள்கிறீர்கள் என்றார் இன்ஸ்பெக்ட்டர் .

இது மட்டுமிலீங்க நிசபதக்களின் விடியல் நேரம்

அடுக்கு மாடி குடியிருப்பிகளில் திருட்டு தனமாக பக்கத்திலே குடியிருக்கும் சந்திக்கும் கள்ள காதலர்கள் .

விவரம் தெரியாமல் ஏதோ சுகம் கிடைக்கிறது என்பதற்க்காக குடியிருப்பின் மறைவிடங்களை ஆண் நண்பர்களுடன் ஒதுங்குகின்ற

சிறுமிகள் .இப்படி பட்டவர்களை தான் தேர்வு செய்து திருடுவதற்கு

அனுப்பி வைப்பான்

33

அது மட்டுமல்ல அவன் திருட மாட்டான் எனக்கு முக மூடி போடுவான் கையில் கத்தியை கொடுப்பான் கட்டிங் பிளேயர் ஒன்னும் தருவான்

ஆட்களை காட்டுவான் ,

பெரிய ஜெயின் பறிக்கிற பலம் என்கிட்ட கிடையாது இந்த மாதிரியான சின்ன பொண்ணுங்கெல்லாம் மெல்லிசாதான் போட்டிருக்கும் .ஈஸியா பறிக்கலாம்

அவுங்க இருட்டிலதான் நிப்பாங்க .வேற மூடுல இருப்பாங்க என்னுடைய வேலையும் ஈஸியா முடிந்திடும்

நான் ஜெயின் அறுத்துவிட்டு வருவேன் பைக்ல ஏத்திட்டு வேகமாக போய் விடுவான்

கிரி எந்த சமயத்திலும் திருட மாட்டான்.திட்டம் அவனது

திருடுவது என்னுடையது .திருடிய நகை அவனுக்கு

நான் திருடும் நகை பெரும்பாலும் சாதாரண குடும்ப பெண்களாகத்தான் இருக்கும் .திருட்டுகள் அதிகம் ஆகியது .இவனுக்கு வருமானம்

தொழிலதிபர்களுக்கு வரும் வருமானம் போல் உயர்ந்தது

ஆடம்பர வாழ்க்கைக்குள் அடிமைப்படுத்திக்கொண்டான்

காசு வர வர ஆடம்பர ஹோட்டல்களை தேர்ந்தெடுத்து அறை போடுவான் .

பெண் காமத்தினால் தடம் புரளும் நிலைக்கு காதல் என்று இளம் பெண்கள் நினைத்துக்கொள்கிறார்கள் .என்னை பொறுத்தமட்டில் உலகிலே கொடூரமான குற்றமே காதல்தேம்பி தேம்பி அழுதுவிட்டால் தர்ஷினி

நல்ல கருத்துதான் துன்பத்துக்கு பிறகு உணர்வது அல்ல காதல் வருவதற்கு முன் யோசிக்கணும் .பெற்றோர்களின்

பொறுப்புகளை அவர்கள் தரும் சுதந்தரத்தை முன்னேற்றத்தின் பாதைகளை உணராத சிறுமிகளின் கிறுக்கு தானம் தான் காதல் சரி இப்போ அழுது என்ன பிரோயோஜனம் .மனசை தேர்த்திக்கிட்டு சொல்லு எப்படி எங்ககிட்ட சிக்கின என்றார் இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத்

இந்த அப்பார்ட்மெண்ட்ல சிறுமியும் ஒருத்தனும் குடியிருப்பின் முதல் மாடியில் மறைந்திருந்து லலீலைகளில் மூழ்கி இருந்த நேரம் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்த பெண்ணின் கழுத்தில் இருந்த செயின் பிளான் பண்ணி சென்றேன்

அவர்களை குறி வைத்து தான் வந்தேன் நான் அந்த சுவர் ஏறும் போது நான் வைத்திருந்த கத்தி என்னையே பதம் பாத்திட்டு மேடம்

அந்த நேரம் அபார்ட்மெண்ட்ல அதே தளத்தில் கதவை திறந்து ஒரு அம்மாவும் கூட இன்னும் ஒரு பொண்ணும் வந்தாங்க .

வரும் சப்தம் கேட்டு .சிறுமியும் அவனும்  உஷாராகி மறைந்து கொணடார்கள்

திருட்டுக்கு இறக்கி விட்ட பின்பு என் கையில் நகை இல்லை என்றால் என்னை தனி அறைக்குள் போட்டு அடிப்பான் தனது பெல்ட்டை கழற்றி அடிப்பான் .ரொம்ப வலிக்கும் மேடம் .இந்த வலிக்கு பயந்தே எதோ ஒரு நகையை திருடுவது என்ற முடிவில் முதன் முதலாக ஒரு வயதான அம்மாவின் அம்மாவின் நகையை ஆட்டையை போடலாமுன்னு கத்திய காட்டினேன்

அந்த அம்மா சற்றும் எதிர்பாராமல் அடித்து விட்டார்கள்

மூணு மாசமா தான் இந்த கொடுமை

மாசத்துக்கு 10 முதல் 15 ஜெயின் பறித்து கொடுக்கிறேன் என்னிடம் ஒரு பைசா கூட கிடையாது

மேடம் என்னை இந்த கொடியவனிடமிருந்து காப்பாத்துங்க

எங்க வீட்டுக்கு தெரிய வேண்டாம் என்ற தர்ஷினி இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் கால்களை கட்டியாக பிடித்து கொண்டு அழுதாள்’

போலீஸ் நிலையம் அழைத்து வந்த கிரிநாத் தேவராஜ் முன்னிலையில் லத்தியால் அடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் .முன்னுக்கு பின்னாக மாற்றி மாற்றி சொன்ன அவனது பதில்கள் குற்றவாளி என்பதை உறுதி செய்தது

அப்போது இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் இருந்து போன் வந்தது

தர்ஷினியிடம் விவரம் சேகரித்து விட்டேன் என்றார்

சரி இந்த ராஸ்கலும் இப்போதான் ஆடம்பர வாழ்க்கைக்காக புதுசா பிளான் பண்ணி ஆரம்பத்திலே மாட்டி இருக்கான் .

முன்னே நின்ற கிரிநாத் மீண்டும் லத்தியால் ரெண்டு போட்டார் .கிளம்பினார்

# 38

## நேரில் வந்தார் தேவராஜ்

இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் உடன் தனிமையில் எல்லா விவரங்களையும் கேட்டு தெரிந்து கொண்டார்

அந்த பொண்ணு திருடியதாக எங்கயும் புகாரும் இல்லை எந்த ஆதாரங்களும் இல்லை திருடும் போது முகமூடி போட்டு திருடி இருக்கிறாள் .

அவனும் எதோ ரூம்ல நாலு பேர் கூட இருக்கான் .வீடியோ வை வைத்து மிரட்டி இருக்கான் .

இவன் மொபைல்ல இருக்கிற வீடியோ மட்டும் தான் .எல்லாம் தேடி அழித்து விட்டேன் மொபைல் லை புடுங்கியாச்சி.

இப்போ இந்த பொண்ணுக்கு எந்த பிரச்சனையும் இல்லை

எலிசபெத் மற்றும்  தேவராஜ் கலந்துரையாடலுக்கு

39

பின்பு இன்ஸ்பெக்ட்டர் எலிசபெத் தேவராஜ் விடை  பெற்றுக்கொண்டார் .

தேவராஜ் அணிந்திருந்த யூனிபார்ம் கழட்டினார்

வீட்டில் அணியும் லோயரையும் பனியனையும் அணிந்து கொண்டார் .

 தர்ஷினி இருந்த அறைக்குள் வந்தார் ஏதிரில் வந்தார் , அவரது கோலத்தையும் தனது அறைக்குள் வந்த வேகத்தையும் பார்த்து பயந்து நடுங்கினாள் தர்ஷினி .

பயப்பட வேண்டாம் உன்னை பார்த்ததும் என் மனதில் ஓடிய நிலைகள் உன்னை இங்கே கொண்டு வந்திருக்கிறது . இது என்னுடைய வீடு

சந்தோசமாக கலகலப்பாக இருந்த இருந்த குடும்பம் என்று ஆரம்பித்த இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ் கண்களில் நீர் துளிகள் வழிந்தன

பெத்தவங்க கஷ்டப்பட்டு உங்களை நல்ல ஸ்கூல் பாத்து சேத்து

விட்ட பொய்யான காம போதைக்கு அடிமையாகிட்டு அதுக்கு காதல்னு

சொல்லிக்கிறீங்க .என்று சொன்னவரின் கோபம் தலைக்கு ஏறி தர்ஷினியை அடித்து விட்டார்

ஒரே அடியில் கிறங்கி போனால் தர்ஷினி அழுகையையால் அலறினாள் தேம்பி தேம்பி கதறினாள்

உன்னை மாதிரி அழகா எனக்கும் ஒரு மகள் இருந்தாள்.அவள் பார்ப்பதற்கு புன்னகை நிறைந்த முக அமைப்பு அந்த அழகுக்கு மேனகா ன்னு பெயர் வைத்திருந்தோம் . அழுகையினுடே வாய் தளும்ப தளும்ப இன்ஸ்பெக்ட்டர் தேவராஜ் கதையா சொன்னார்

எனக்கு அவள் ஒரே பொண்ணுதான் .வேற எனக்கு சந்ததி இல்லை எங்க வீட்ல இருந்து 5 கிலோமீட்டர் தூரம் தான் ஸ்கூல்

ஒரு நாள் என்கிட்டே மொபைல் வேணும்னு கேட்டாள் .வாங்கி கொடுத்தேன் . அப்புறம் தான் அவளுடைய அஸ்திபாரம் தடுமாற தொடங்கியது

நானே இன்ஸ்பெக்ட்டர் என் வீட்டுக்குளேனும் இந்த பாழா போன காதல் என்கிற கொடிய வைரஸ் நோய் என் பொண்ண பிடிச்சிட்டுது

ஊர்ல உள்ள சொந்த காரன் ஒரு பையன் கூட நட்பு ஆகி .ஸ்கூல் கட் அடிச்சிட்டு ஊர் சுத்தி இருக்காங்க .உல்லாசமாய் இருந்துள்ளார்கள்

என் பொண்ணு கர்ப்பம் ஆகிட்டா கலங்கினார் இன்ஸ்பெக்ட்டர்

ரொம்ப.பயந்து போன என் பொண்ணு அவன் கிட்ட சொல்லி இருக்கிறாள் அவனிடம் எந்த ரியாக்சனும் இல்லை

குழப்பமும் பதட்டமுமாக கருவை கலைக்குறதுக்காக

ஒண்ணுக்கும் ஒதவாதவனுக எல்லாம் யூ டுப்பில மருந்து சொல்லறானுங்க

யு டுயூப் மற்றும.அவுங்க இவுங்க யோசனைகளை கேட்டு

என் பொண்ணு கரு கலையும்னு எதோ சாப்பிட்டு இருக்கிறாள்

ரெத்தம் அதிகமாக  போய் ஆபத்தான நிலைமையில் ஆஸ்பத்திரியில் சேர்க்க பட்டாள்

அவசர பிரிவில் என் பொண்ணு கிடந்த கோலம் உடம்பு முழுதும் டுயூப் களும் .வயர்களும் தான் இருந்துது

என் பொண்ணுக்கு அசைவே இல்லை பார்க்க முடியல என்னுடைய இதயமே வலிகளால் அழுதது

சிகிச்சை பலன் இல்லாமல் செத்து போனாள் .

விஷயம் வெளிய தெரியாமல் என் பொண்ணு மானத்தை காப்பாத்துறதற்காக  இருதய பலவீனத்தால் செத்திட்டாள் என்று சொல்லி  ஊரை நம்ப வைத்தோம்

43

பொண்ணு செத்த சோகத்தில் என் பொண்டாட்டி ஏக்கத்தில படுத்த படுக்கையானாள் ,ஆறு மாசம் தான் அவளும் போய்ட்டா .

என் பொண்ணு பேரு அசிங்கப்படக்கூடாதுன்னு அந்த பயல பாத்தாலும் எதுவும் நடக்காதது

மாதிரி மனசை கல்லாக்கி வைத்திருக்கிறேன்

மகளை பிரிந்து தவிக்கும் நிலைமை எனக்கு தான் தெரியும்

இது போல நிலைமை வேறு பெற்றோருக்கு வரக்கூடாதுன்னு நான் உன்னை காப்பாத்தி இருக்கேன்

அழுகையுடன் ஓடி வந்தாள் தர்ஷினி

இன்ஸ்பெக்ட்டர் தேவராஜை அப்பா என்று சப்தமாக அழைத்தபடி ஓடி வந்து கட்டி அனைத்து கொண்டாள் தர்ஷினி

தேவராஜும் ஏக்கத்துடனும் பாசத்துடனும் கண்ணீர் சொட்ட

44

தழுவி கொண்டான்

.இனிமேலும் இது போன்ற செயல்களில் எந்த காரணத்தாலும் ஈடுபட மாட்டேன் காதல் மோகத்தால் என்னை நானே கொடுமை படுத்தி கொண்டேன்

என்னுடைய இந்த கெட்ட சூழ்நிலைகளிலும் உங்களை போன்ற நல்ல அதிகாரிடம் சிக்க வைத்தது கடவுள் என் மீது கொண்ட கருணை தான்  ஒரு நல்ல அப்பாவையும் கொடுத்திருக்கிறார் என்று கண் கலங்கினாள்

இது வரை நடந்தவைகள் எல்லாம் ஒன்றும் நடக்காதது போல நினைத்து கொண்டு நன்றாக படி வருங்காலங்களில் மிக பெரிய சாதனை படைக்கும் பெண்ணாக உருவாக  வாழ்த்துகிறேன் .

நீ என் மகளாகிவிட்டாய் உனக்கு எந்த பிரச்சனைகளும் வராமல் பாதுகாப்பதும் என் கடமை

45

நிசப்தகள் நிறைந்த இரவுகளில்
உன்னை சீரழித்து வந்த
வாழ்க்கையில் நிசப்தமான இரவு
கடந்து நேரம் விடுவது போல உன்
வழக்கியிலும் நிசப்தங்களின் விடியல்
உதயமாகிறது .கவனமாக வாழ
கற்றுக்கொள்வது தான் நல்லது
என்றார் தேவராஜ்

நிசப்தகள் மத்தியில்
அப்பார்ட்மெண்ட் சம்பவங்கள்
உன்னை பெரிய இக்கட்டுகளில்
காப்பாத்தி இருக்கிறது

அப்பா முதலில் ஆஸ்பத்திரிக்கு
போகணும் என்னுடைய
வாழக்கையில் திருப்பு முனையாக
வந்த இந்த சம்பவத்தின் இறைவனாக
உதித்த குழந்தையை பார்க்கணும்
என்றாள்

குழந்தைக்கு ஒரு கிப்ட்
வாங்கிக்கொண்டு பார்சலுடன்
இருவரும் ஆஸ்பத்திரிக்கு
புறப்பட்டார்கள்